**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 1 – திரு.சின்னப்பா**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

புகார்மனுவை நான் எழுதினேனா அல்லது கையெழுத்து மட்டும் போட்டேனா என்றால் நான்தான் எழுதினேன். சின்னப்பா என்று போடப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையதா அல்லது வேறு யாரும் போட்டார்களா என்றால் நான்தான் கையெழுத்து போட்டேன். புகார்மனுவில் உள்ள கையெழுத்துக்கும், கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் இல்லை, நான்தான் எழுதி கையெழுத்துபோட்டேன். எத்தனை மணிக்கு கையெழுத்து போட்டேன் என்றால் இரவு சுமார் 11.00 மணியளவில் போட்டேன். எங்குவைத்து கையெழுத்து போட்டேன் என்றால் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன். கையெழுத்து போடும்போது யாரெல்லாம் இருந்தார்கள் என்றால் நானும், ரைட்டரும், எனது சித்தியும் இருந்தோம். இறந்துகிடந்த சம்பவ இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் காலையில்தான் வந்தார்கள். அதற்கு முன்பு வரவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை ஆர்சி கோவில் ரோட்டில் உள்ளவர்கள் பார்த்தார்களா என்றால் நான் போகும்போது யாரும் இல்லை. வழக்கமாக கோவில்பக்கம் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் போகும்போது அந்த இடத்தில் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். நான் முதல்முதலாக என் சித்தப்பா எங்குவைத்து பார்த்தேன் என்றால் சமத்துவபுரத்தில் பார்த்தேன். நான் எதற்காக போனேன் என்றால் தெரு லைன் பைப் வரும் இடத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தார்கள், அதனால் அந்த இடத்தில்

நின்று கொண்டிருந்தேன். நான் அங்கு நின்றுகொண்டிருக்கும்போது எதிரிகள் வந்தார்கள் என்றால் எதிரி ராமர் வீடு அங்குதான் உள்ளது, அவர் மட்டும்தான் அங்கு வந்தார். அங்கு பிரசிடென்ட், பிளம்பிங் வேலை பார்க்கும் நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த இடத்தில் தண்ணீர் வரவில்லை என்று முறையிடத்தான் ராமர் வந்தார் என்றால் இல்லை, எனது சித்தப்பாதான் தண்ணீர் வரவில்லை என்று சொல்ல சென்றார். 1ம் எதிரிக்கும், எனது சித்தப்பாவிற்கும் எவ்வளவு நேரம் வாய்தகராறு நடந்திருக்கும் என்றால் சுமார் ½ மணி நடந்திருக்கும். அதற்கு முன்பு வேறு முன்விரோதம் அவர்களுக்குள் கிடையாது என்றால் இருவரும் பேசிக்கொள்ள மாட்டார்கள். அவர்களை விலக்கி விட்டு சமாதானம் செய்து 2 பேரையும் வீட்டிற்கு அனுப்பி விட்டார்கள் என்றால் சரிதான். முன்விரோத சம்பவம் காலை 11.00 மணிக்கு நடந்தது. அவர்கள் போனபிறகு 1ம் எதிரி சிவப்பு பைக்கை எடுத்துகொண்டு சென்றதை வண்டியின் எண்ணை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் புகார்மனுவில் வாகன எண் சொல்லவில்லை என்றாலும், சொல்லியுள்ளேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இரண்டாவது முறை சம்பவத்தை பார்க்கும்போது சிஎஸ்ஐ கோவிலுக்கு முன்பு இருந்தேனா பின்பு இருந்தேனா என்றால் வந்து கொண்டிருந்தேன். எதற்காக நடந்து வந்து கொண்டிருந்தேன் என்று புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். பஸ்ஸ்டாப்பிற்கும் அந்த இடத்திற்கும் ½ கிமீ இருக்குமா என்றால் 300 அடிக்கு குறைவாக இருக்கும். இருட்டாக ஆரம்பித்துவிட்டது என்றால் சுமாராக இருட்ட ஆரம்பித்தது. அதே சிவப்பு பைக்தான் தெற்கேயிருந்து வடக்கே வந்தது என்றால் கிழக்கே வைத்தியலிங்கபுரம் ரோட்டிலிருந்து வந்தது. நான் பார்க்கும்போது பின்னால் இருந்த ஆள் யார் என்று அடையாளம் எதுவும்

புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான், நான் கிட்டே போகும்போது எதிரிகள் இருவரும்தான் சம்பவம் செய்தது. புகார் கொடுத்த உடன் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்துவிட்டார்களா என்றால் காலையில் வந்தார்கள். உடனே சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். பிரேதம் மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரைதான் அந்த இடத்திலேயேதான் இருந்தது என்றால் இல்லை, அதிகாலை 3 மணிக்கு மேல் போலீசார் வேன் வந்து எடுத்து சென்றுவிட்டார்கள். அதிகாலை 3 மணிக்கு விசாரணை ஆரம்பித்தார்கள் என்றால் சரிதான். அந்த ஏரியாவில் உள்ளவர்களை கூப்பிட்டு விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அவர்களிடம் வாக்குமூலம் எழுதினார்களா என்றால் இல்லை. அங்கு யாரும் சம்பவத்தை பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் சம்பவத்தை பார்த்தோம் என்ற விவரத்தை மற்றவர்கள் சொன்னார்களா என்றால் அது பற்றி தெரியாது. என் முன்னிலையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பைக் சம்பவம் நடக்கும்போது எங்கு நின்றது என்றால் பஸ்ஸ்டாப்பிற்கு எதிரே தார் ரோட்டில் நின்றது. புகார்மனுவில் என் சித்தப்பா ஆர்சி கோவிலுக்கு பின்புறம் நின்று கொண்டிருந்தார் என்றும், அப்போது பைக்கில் வந்த எதிரிகள் என்றுதான் சொல்லியுள்ளேன் என்றாலும், சிவப்பு கலர் பைக் என்று சொல்லவில்லை என்றாலும் சரிதான். சித்தப்பா எதற்கு பஸ்ஸ்டாப்பில் நின்றார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவர் கையில் ஆயுதங்கள் எதுவும் இருந்ததா என்றால் இல்லை. அவர் சட்டை அணியவில்லை என்றால் சரிதான். சம்பவம் முடியும்வரை பைக் அங்குதான் நின்றதா என்றால் நின்றது. பைக் 1 வது எதிரியின் சித்தி மகன் முருகேசனுடையது என்றால் சரிதான். 400 அடி தூரம் தள்ளி ஓடி வந்துகொண்டிருக்கும்போது காம்பவுண்டிற்குள் நடந்த சம்பவத்தை பார்க்க

முடியாது என்றால் முதலில் பஸ்ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்த என் சித்தப்பாவை வெட்ட வந்தபோது அவர் அங்கிருந்து காம்பவுண்டிற்குள் ஓடினார். என் சித்தப்பா ஓட ஆரம்பித்தவுடன்தான் நானும் ஓட ஆரம்பித்தேன் என்றால் சரிதான். காம்பவுண்டிற்கு வெளியே இருந்து பார்த்தால் சம்பவம் நடப்பது தெரியாது என்றால் சரியல்ல, காம்பவுண்டு என்னுடைய மார்பு அளவுதான் இருக்கும், சுவருக்கு பின்னால் நின்று பார்த்தால் தெரியாது என்றாலும் திறந்த வெளியில் நின்று பார்த்தால்தான் தெரியும் என்றாலும் சரிதான். செபஸ்தியார் கோவில் சுவர் பக்கம்தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். என் சித்தப்பா கோவிலை நெருங்கும் முன்பாகவே 5,6 வெட்டுக்கள் பின்பக்கம் விழுந்துவிட்டது என்றால் சரிதான். அவர் வெட்டுப்பட்டது என்ன அரிவாள் என்றால் வெட்டருவாள். கோழிவால் அரிவாள் கிடையாது என்றால் சரிதான். அவர் இறந்ததை நான் பார்த்தேன் என்று நான் புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். மற்ற வெட்டுக்கள் எல்லாம் கீழே விழுந்தவுடன் விழுந்தது என்றால் கீழே விழுந்த உடனும் மாறி மாறி வெட்டினார்கள். நான் பார்த்த 2 அரிவாள்களில் எந்த அரிவாள் கோழிவால் அரிவாள், எந்த அரிவாள் வெட்டருவாள் என்றால் இரண்டுமே வெட்டருவாள்கள்தான். நான் 100 அடி தள்ளி பார்க்கும்போதே எல்லா வெட்டுக்களும் விழுந்துவிட்டது என்றால் சரிதான். அந்த அரிவாள்கள் இரண்டுமே கூர்மையான அரிவாள்கள் என்றால் சரிதான். என் சித்தப்பாவின் பிணக்கூறாய்வு அறிக்கையில் 9 காயங்கள் சிதைந்த காயங்களாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ஒரே ஒரு காயம் மட்டும்தான் வெட்டுக்காயமாக இருந்தது என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை பார்க்கவேயில்லை என்றுசொன்னால் சரியல்ல. புகார்மனுவில் போகும்போது கிழக்காக பைக்கில் சென்றுவிட்டார்கள் என்று

சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பைக் நின்ற இடத்திற்கு கிழக்கே காம்பவுண்ட் சுவர் என்றால் சரிதான், வைத்தியலிங்கபுரம் ரோடு உள்ளது. அதன் வழியாக போக முடியாது என்றாலும் நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. என் சித்தப்பா கிடந்த இடத்திற்கு வேறு நபர்கள் வருவதற்கு எவ்வளவு நேரம் ஆகியது என்றால் நான் போய் கூட்டி வருவதற்கு சுமார் 1 மணி நேரம் ஆகியது. போலீசுக்கு யாரும் தகவல் தெரிவித்தார்களா என்றால் இல்லை. என்னிடம் போன் இருந்ததா என்றால் வீட்டிலிருந்தது அதனால் போலீசாருக்கு போன் மூலம் தகவல் சொல்லவில்லை. 2ம்எதிரி எங்கள் ஊரில்தான் இருக்கிறார் என்றால் சரிதான். அவரைத்தான் நான் புகார்மனுவில் அடையாளம் தெரியாத நபர் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவர் சின்ன வயதிலேயிருந்து அங்குதான் இருக்கிறார் என்றால் சரிதான். அன்று சிறிது இருட்டானதால் அடையாளம் தெரியவில்லை என்றால் சரிதான். காலையில் ராமர் மற்றும் மணிகண்டன் என்பவர் பைக்கில் வந்தார்களா என்றால் ராமர் காலையில் நடந்துதான் வந்தார். மாலையில் ராமரும் மணிகண்டனும் பைக்கில் வந்தார்கள். சமாதானம் செய்து அனுப்பிவிட்டபிறகு எதிரி அவரது வீட்டிற்கு சென்று சிவப்பு பைக்கை எடுத்துக்கொண்டு வைத்தியலிங்கபுரம் ரோட்டில் சென்றதை நான் புகார்மனுவில் சொல்லியுள்ளதை நேரில் பார்த்தேனா என்றால் பார்த்தேன். சிவப்பு நிற பைக்கில் காலையில் 1ம் எதிரியும், மணிகண்டனும்தான் வந்தார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. மேற்படி பைக்கை மணிகண்டன் எடுத்து சென்றுவிட்டார் என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் அந்த வண்டிதான் சம்பவத்திற்கு உதவியாக சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் ஏன் போலீசுக்கு போன் செய்யவில்லை என்றால் நான் எல்லோரையும் அழைத்து வர

நேரமாகிவிட்டது. ஊரிலிருந்து யாரும் போன் செய்தார்களா என்றால் தெரியாது. நாங்கள் புகார் கொடுத்த பின்பு போலீசுடன் சம்பவ இடத்திற்கு தனியாக வந்தேனா என்றால் இல்லை, நானும் எனது சித்தியும் வந்தோம். அந்த சமயத்தில் பிரேதத்தை சுற்றி யாரும் இல்லை என்றால் ஊர்க்காரர்கள் இருந்தார்கள். ஆய்வாளர் வேறு யாரிடமும் சம்பவத்தை பார்த்ததாக கையெழுத்து வாங்கினாரா என்றால் இல்லை. வேறு யாரையும் விசாரித்தாரா என்றால் அங்குள்ளவர்களை விசாரித்தார். அதன்பிறகு நான் ஆஸ்பத்திரிக்கோ, காவல்நிலையத்திற்கோ சென்றேனா என்றால் காலை 3 மணிக்கு மேல் காவல்நிலையத்தின் வாசலில் இருந்தோம். பிரேத பரிசோதனை செய்ததற்கு என்னிடம் கையெழுத்து பெற்றார்களா என்றால் இல்லை. இறந்தவரின் உடல் ஆஸ்பத்திரிக்கு வந்தபின்பு நான் ஆஸ்பத்திரிக்கு போகவில்லை என்றால் சரிதான், நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். இறந்துபோன என் சித்தப்பா பட்டியல் இனத்தவரை ஜாதியை சொல்லி ஏசி அவருக்கு கையை உடைத்துவிட்டதாக வழக்கு நடந்துகொண்டிருந்தது என்றால் தெரியாது. அந்த கை ஒடிந்தவரும் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. என் சித்தப்பா நாடார் இனத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். அவர்கள் ஜாதிகளுக்குள்ளேயே கூட்டம் போடும்போது சண்டை போடுவார் என்றால் சரக்கு போட்டால் ஜாலியாக பேசுவார், சண்டை போடமாட்டார். மற்றவர்கள் மீது ஜாதியை சொல்லி பேசுவாரா என்றால் இல்லை. நான் மிட்டாய் வியாபாரம் செய்கின்றேன் என்றால் சரிதான். காலையில் எத்தனை மணிக்கு போய்விட்டு எத்தனை மணிக்கு வருவேன் என்றால் நான் செல்லமாட்டேன், ஆட்கள் செல்வார்கள். ஆய்வாளர் சம்பவம் நடந்த அரை மணி நேரத்தில் வந்துவிட்டார்கள் என்றும், காலை வரை விசாரித்து யார் சரியாக பொய் சாட்சியம் அளிப்பார்கள் என்று அறிந்து என்னிடம் புகார்மனு பெற்றார்கள்

என்றால் சரியல்ல. காலை 9.30 மணிக்குதான் சம்பவ இடத்தில் வைத்துதான் புகார்மனு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. 10.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு சென்றடைந்துள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றாலும், என் சித்தப்பா என்பதால் போலீசாரால் கண்ணுற்ற சாட்சியாக உருவாக்கப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரியை நான்தான் வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடப்பதற்கு 4 நாட்களுக்கு முன்பாக வயக்காட்டில் வைத்து இறந்தவரின் மனைவிக்கும், 2ம் எதிரியின் அம்மாவிற்கும் வாய்தகராறு ஏற்பட்டது என்றால் அது பற்றி தெரியாது, நான் போகவில்லை. 2ம் எதிரி இறந்தவருடைய மனைவியை வீணாக சண்டை போடாதீர்கள் என்று சத்தம் போட்டார் என்றும், என்னையும் சத்தம் போட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. அந்த முன்விரோதத்தை வைத்து அவரை பின்னிட்டு இவரை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 2 – திரு.லெட்சுமணபெருமாள்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் பஞ்சாயத்து தலைவரோடு சேர்ந்து வேலைகளை பார்க்க சென்றேனா என்றால் வேலை நடந்துகொண்டிருந்தது. 1ம் எதிரி எங்கள் தெருவில்தான் குடியிருக்கிறார் என்றால் சரிதான். இறந்துபோன கணேசன் பஞ்சாயத்து பிரசிடென்ட் உடன்தான் வந்தார் என்றால் இல்லை. கணேசன் என்னுடன் வந்தாரா என்றால் ரோட்டில் நின்று கொண்டிருந்தார். நாங்கள் நால்வரும் பைப் லைன் வேலை பார்த்துக்கொண்டிருந்தோம். கணேசன் 180அடி தள்ளி இறந்துபோன கணேசன் ரோட்டில் நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் என்னிடம் வந்து முறையிடவில்லை என்றால் தண்ணீர் வரவில்லை என்று சொன்னார். அந்த நேரத்தில் 1ம் எதிரியும், மணி என்ற ஒரு பையனும் பைக்கில் வந்தார்கள் என்றால் 2ம் எதிரி வரவில்லை, ராமர் மட்டும் வந்து பேசினார். உடன் யாரும் வந்ததை நான் பார்க்கவில்லை. 1ம் எதிரி ராமர் தண்ணீர் வரவில்லை என்று முறையிட்டார் என்றால் கணேசன் தண்ணீர் வரவில்லை என்று சொல்லிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி தண்ணீர் ஒழுங்காக வரும் என்று சொல்லி இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு சண்டையானது, நான் சமாதானம் செய்து அனுப்பி வைத்தேன். அங்கு தள்ளுமுள்ளு நடந்தது என்றால் சரிதான். எவ்வளவு நேரம் வாய்தகராறு நடந்திருக்கும் என்றால் சுமார் 1/4மணி முதல் ½ மணி நேரம் வரை நடந்திருக்கும். இருவரும் சமாதானம் பேசி

அனுப்பிவைத்தேன் என்றால் அங்கு சமாதானம் செய்யும் அளவிற்கு இல்லை, விலக்கிவிட்டேன். இது நடந்தது எப்போது என்றால் மாலை சுமார் 4.30 மணியிலிருந்து 5.00 மணிக்குள் இருக்கும். அ.சா.1 சின்னப்பா அங்கு வரவில்லை என்றால் நான், சிவபெருமாள், வெங்கடாசலம், சின்னப்பா ஆகிய நால்வரும்தான் அங்கு நின்று கொண்டிருந்தோம். அ.சா.1 சின்னப்பா அங்கு வரவில்லை என்றால் சரியல்ல. அவர் எதுவும்முறையிடவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ராமர் பைக்கில் வந்தாரா என்றால் பைக்கில்தான் வந்தார். சிவப்பு கலர் பைக்கில்தான் வந்தார் என்றால் ஞாபகமில்லை. தள்ளுமுள்ளு நடந்தபின்பு அவர் பைக்கில் சென்றுவிட்டார் என்றால் சரிதான். 1ம் எதிரியுடன் மணிகண்டன் என்ற நபர் உடன் வந்தார் என்றாலும், வாக்குவாதம் முடிந்தபின்பு அவர் அந்த பைக்கின் உரிமையாளரிடம் கொடுப்பதற்காக முருகேசன் வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றாலும் தெரியாது. நான் போலீசுக்கு பயந்து, நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சமாதானம் செய்து நண்பர்களாக அனுப்பி விட்டோம் என்றால் சரியல்ல. நான் வேலை நடந்ததால் அங்கு நடந்ததை சரியாக கவனிக்கவில்லை என்றால் இருவரையும் பிரித்துவிட்டேன். அந்த பைக்கில் பின்னால் அமர்ந்து வந்த மணிகண்டன் 1ம்எதிரியையும் அழைத்துக்கொண்டு அந்த பைக்கை முருகேசன் வீட்டில் கொண்டு கொடுப்பதற்காக சென்றுவிட்டார் என்றாலும் 1ம் எதிரி அவர் வீட்டிற்கு செல்லவில்லை என்றாலும் சரியல்ல. கணேசன் இறந்துவிட்டார் என்று எப்போது தெரியும் என்றால் நான் ஊருக்கு சென்றுவிட்டேன். அதன்பின்பு போன் மூலம் தெரிந்தது. அன்று இரவு எத்தனை மணிக்கு தெரியும் என்றால் மாலை சுமார் 6.30 மணியளவில் ஊர்க்காரர்கள் மூலம் தெரியவந்தது. போலீசார் சம்பவ

இடத்திற்கு வந்தார்களா என்றால் சம்பவ இடத்திற்கு நான் செல்லவில்லை, போலீசார் வந்தார்களா என்று தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 3 – திரு.வெங்கடாசலம்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் பஞ்சாயத்து கிளார்க்காக வேலை பார்க்கிறேன் என்றால் தற்பொழுது மீரான்குளம் பஞ்சாயத்து கிளார்க்காக வேலை பார்க்கிறேன். பைப்லைன் போடும்போது நான் அங்குதான் நின்றேனா என்றால் நின்றேன். மாலை 5.00 மணிக்கு நின்றேன் என்றால் சரிதான். கணேசன் அங்கு நின்றாரா என்றால் நின்றார். அவர் எதுவும் புகார்கொடுத்தாரா என்றால் தண்ணீர் வரவில்லைஎன்று சொன்னார். அவருடன் சின்னப்பா யாரும் வந்தார்களா என்றால் சின்னப்பா அங்குதான் நின்றார். 1ம் எதிரி ராமர் சிவப்பு பைக்கில் வந்தார் என்றால் பைக்கில் வந்தது ஞாபகமில்லை, அவரது வீடு அதே தெருவில்தான் இருந்தது, அங்கிருந்து வந்தார். பைக்கை மாலை 4.30, 5.00 மணியளவில் பார்த்தேனா என்றால் இல்லை. 1ம் எதிரி ராமர் கான்ட்ரக்டரிடம்தான் தண்ணீர் வரவில்லை என்று கேட்டார் என்றால் கணேசன்தான் கேட்டார், அதன்பிறகு இருவருக்குள்ளும் வாக்குவாதம் ஏற்பட்டது. முதலில் கணேசன் கேட்டாரா, ராமர் கேட்டாரா என்றால் கணேசன் கேட்டார், அதன்பின்பு ராமர் வந்தார். அவர்களுக்குள் வாக்குவாதம் சுமார் ½ மணி நேரம் நடந்தது என்றால் சுமார் 15 நிமிடங்கள் நடந்திருக்கும். அதன்பிறகு எதிரியும் இறந்துபோனவரும் என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அந்த ஊரில்தான் இருந்தேனா என்றால் எனக்கு மேலஅம்பலசேரி, சம்பவம் நடந்தது கீழஅம்பலசேரி, எனக்கு சம்பவம் குறித்து மாலை 7.30 மணிக்கு தெரியும். சம்பவ இடத்தில் ஊர்மக்கள் கூடிவிட்டார்களா

என்றால் நான் அங்கு செல்லவில்லை. போலீசார் வந்துவிட்டார்களா என்றால் தெரியாது. 2ம் தேதி சம்பவம் நடந்தது. 3ம் தேதி போலீசார் வந்து விசாரித்தார்கள். போலீசார் எப்போது விசாரித்தார்கள் என்றால் காலையில் விசாரித்தார்கள். 1ம் எதிரி ராமர்தான் முதலில் தண்ணீர் வரவில்லை என்று கேட்டார் என்றும், கணேசன்தான் வந்து வாக்குவாதம் செய்தார் என்றும் சொன்னாலும் சரியல்ல. வாக்குவாதத்தை சமாதானம் செய்து அனுப்பி விட்டோம் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 4 – திரு.சிவபெருமாள்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் பிளம்பிங் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன் என்றால் சரிதான். 1ம் எதிரி ராமர் தண்ணீர் வரவில்லை என்று புகார் சொன்னார் என்றால் இல்லை, கணேசன்தான் சொன்னார். ராமர் எதுவும் புகார் சொன்னாரா என்றால் இல்லை. 1ம் எதிரி ராமர் பிளம்பர்தான் என்றால் அது பற்றி தெரியாது. ராமர் அந்த இடத்தில் வேலை பார்க்கவில்லை என்றால் சரிதான். அவர் பஞ்சாயத்தில் மெம்பராகவோ, தலைவராகவோ இல்லை என்றால் சரிதான். கணேசன் தண்ணீர் வரவில்லை என்று சொன்னால் அதற்கு ராமர் கோபப்படவேண்டிய அவசியமில்லை என்றால் அவசியமில்லை, ஆனால் அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர்கள் இருவரையும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம் என்றால் அங்கு இருந்த நால்வரும் சமாதானம் செய்து அனுப்பி வைத்தோம். எத்தனை மணி வரை வேலை பார்த்தோம் என்றால் மாலை 5.00 மணி வரை வேலை பார்த்தோம். எத்தனை மணிக்கு சம்பவம் குறித்துதெரிந்தது என்றால் இரவு 7.30 மணியளவில் ஊர்க்காரர்கள் மூலம் தெரிந்தது. கட்டாரிமங்கலத்திலிருந்து அந்த ஊர் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 5 – திருமதி. பிராட்டி**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

எங்கள் ஊர் பஸ்ஸ்டாப்பிலிருந்து எங்கள் வீடு எவ்வளவு துாரம் என்றால் எனக்கு மைல் கணக்கு தெரியாது. சமத்துவபுரத்திற்கு 2 கி.மீ தள்ளி இருக்கிறோம் என்றால் கோவிலுக்கும் சமத்துவபுரத்திற்கும் நடுவே இருக்கிறோம். அன்றையதினம் மாலை 7.00 மணிக்கு எங்கிருந்தேன் என்றால் வீட்டில் இருந்தேன். எனது கணவர் வீட்டிற்கு வந்தாரா என்றால் இல்லை. எனது கணவர் பஸ்ஸ்டாப்பிற்கு எதற்கு சென்றார் என்றால் தெரியாது. சட்டம் போடாமல் போயிருந்தார் என்றால் சரிதான். கையில் ஒரு பெரிய கம்பு வைத்திருந்தாரா என்றால் தெரியாது. எனக்கு எத்தனை மணிக்கு சம்பவம் தெரியும் என்றால் மாலை 6.30 மணிக்குமேல் சின்னப்பா வந்து சொன்னார். நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது 7.15 மணி இருக்கும் என்றால் 6.30 மணிக்கு மேல் என்னை வீட்டில் வந்து கூட்டி சென்றார். நான் போகும்போது போலீசார்கள் வந்துவிட்டார்கள் என்றால் வரவில்லை. எனது கணவர் கீழே படுத்து இருந்தார் என்றால் சரிதான். கோவில் சுவர் ஒட்டி 5,6 அடி வடக்கே தள்ளி இருந்தார் என்றால் சரிதான். ஊர்க்காரர்கள் எல்லோரும் பார்த்தார்கள் என்றால் சரிதான். போலீசுக்கு எல்லாம் ஊர்க்காரர்கள் தகவல் கொடுத்தார்கள் என்றால் தெரியாது. நான் போய் எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால் தெரியாது, சுமார் 1/2 மணிநேரம், ஒரு மணி நேரத்திற்கு பிறகு வந்திருப்பார்களா என்றால் தெரியாது. எனக்கும், 2ம் எதிரியின் அம்மாவிற்கும் வாய்தகராறு நடந்ததா என்றால் இல்லை. எங்கள் இருவருக்கும் 4 நாட்களுக்கு முன்பு

சண்டை நடந்தது என்றால் இல்லை, அதனால்தான் இந்த 2ம் எதிரியை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளோம் என்றால் இல்லை. எனது கணவர் முரட்டு சுபாவம் கொண்டவர் என்றால் எங்களிடம் மட்டும்தான் பேசுவார். ஊரில் உள்ளவர்களிடம் சண்டை போடமாட்டார். எனது கணவர் ஒரு பட்டியல் வகுப்பினரை அடித்து கையை உடைத்துவிட்டார் என்றால் இல்லை. நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நாடார் சமுதாய ஊர்க்கூட்டத்திலும் எனது கணவர் தகராறு செய்வார் என்றால் இல்லை. 1ம் எதிரி பஞ்சாயத்து பிளம்பிங் பேசும்போது தேவையில்லாமல் எனது கணவர்தான் பிரச்சனை செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவரை வேறு யாரோதான் முன்விரோதம் காரணமாகத்தான் வெட்டிவிட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் பைக்கில் வந்து எனது கணவரை வெட்டியதாக கேள்விப்பட்டது பொய் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், எனது கணவருக்கும் எந்த முன்விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எனது கணவரின் பிரேதத்தை எத்தனை மணிக்கு கொண்டு சென்றார்கள் என்றால் நான் அழுதுகொண்டிருந்தேன் என்பதால் எனக்கு தெரியாது. எனக்கு மணியும் பார்க்க தெரியாது, கையில் செல்போனும் கிடையாது.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 6 – திரு. வெஸ்லி புருஷோத்தமன்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் போகும்போது பிரேதம் அங்குதான் இருந்ததா என்றால் இல்லை. நான் போகும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 7.00 மணி இருக்கும். எத்தனை மணிக்கு பிரேதத்தை எடுத்துசென்றார்கள் என்றால் தெரியாது. நான் நாடார் தெருவில் குடியிருப்பதால் இறந்துபோனவர் எனக்கு உறவினர் என்றால் இல்லை, எனது சமுதாயத்தை சேர்ந்தவர். வெளியே உள்ள பஸ்ஸ்டாப்பிலிருந்து சம்பவம் நடந்த இடம் 400 அடி இருக்கும் என்றால் சரிதான். சர்ச்சை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவரில் ஒரு திறந்த வெளி இருக்கும் என்றால் சரிதான். பஸ்ஸ்டாப்பிலிருந்து சமத்துவபுரத்தை தாண்டி உள்ள சிஎஸ்ஐ சர்ச் அரை கி.மீ தூரம்இருக்கும் என்றால் சரிதான். அந்த பஸ்ஸ்டாப்பில் 6.45 மணிக்கு இருட்டாக இருக்கும் என்றால் இருட்ட ஆரம்பிக்கும். அரை கி.மீ தாண்டி சிஎஸ்ஐ கோவிலை தாண்டி உள்ள ரோட்டிலிருந்து பார்த்தால் யார் யார் நிற்கிறார்கள் என்று சரியாக தெரியாது என்றால் சுமாராக இருட்டாக இருப்பதால் சரியாக தெரியாது. எங்கள் சமுதாய கூட்டத்தில் இறந்துபோன கணேசன் பேசி சண்டை போடுவார் என்றால் தெரியாது. சிஎஸ்ஐ கோவிலுக்கும், சமத்துவபுரத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் ½ கி.மீ தூரம் இருக்கும். அவர் இறந்துகிடந்த இடத்திலிருந்து 10 அடி தள்ளி சர்ச் உள்ளது என்றால் சரிதான். அப்போது சர்ச்சில் பூஜை எதுவும் நடக்கவில்லை என்றால் சரிதான். அதற்கு எதிரே பாழடைந்த பள்ளிக்கூடம், சத்துணவு கூடம்உள்ளது என்றால் சரிதான்.

அப்போது அங்கு ஆட்கள் இல்லை என்றால் சரிதான். நான் சம்பவம் கேள்விப்படும்போது 7.30 மணி இருக்கும் என்றால் சரிதான். உடனே சம்பவ இடத்திற்கு போனேனா என்றால் இல்லை. கையெழுத்தை காவல்நிலையத்தில் வைத்துதான் போட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ–2,3 ஐ யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆய்வாளர் சொல்ல சொல்ல கணினியில் தட்டச்சு செய்து என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். என்னை போலீசார் விசாரிக்கும்போது கணினியில் தட்டச்சு செய்தார்கள், பிரிண்டர் வைத்திருந்தார்கள் என்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பிரேத பரிசோதனை செய்யும்போதுதான் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 7 – திரு. ராமராஜ்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)**

இறந்த கணேசன் எனது உறவினர் என்றால் சரிதான். காவல்நிலையத்திற்கு செல்லும்போது எதிரியை விசாரித்து கொண்டிருந்தார்களா என்றால் தெரியாது. தட்டச்சு செய்து வைத்துவிட்டு என்னை கூப்பிட்டார்கள் என்றால் சரிதான். இரண்டு கையெழுத்துக்களையும் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றால் இல்லை, காலை 8.30 மணியளவில் அம்பலசேரி சுடுகாட்டிற்கு பக்கத்தில் உள்ள புதருக்குள் இருந்து அரிவாளை எடுத்தபோது கையெழுத்துபோட்டேன். எத்தனை அரிவாள் எடுத்தார்கள் என்றால் ஒரு அரிவாள். வெட்டருவாளா, கோழிஅரிவாளா என்றால் கோழிஅரிவாள். அதை யார் எழுதினார்கள் என்றால் ஆய்வாளர் எழுதினார். அந்த அரிவாள் கிடந்த இடம் எல்லோரும் போக கூடிய இடம் என்றால் சரிதான். அந்த அரிவாளில் இரத்தக்கறை எதுவும் இல்லை என்றால் இருந்தது. நான் முதல்விசாரணையில் அரிவாளில் இரத்தம் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ–4 அத்தாட்சியில் கைப்பற்றிய சொத்தின் விவரத்தில் 50 செ.மீ நீளமுள்ள இரும்பு வெட்டருவாள் ஒன்று என்று தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும், இரத்தக்கறை இருந்ததாக சொல்லப்படவில்லை என்றாலும் சரிதான், நான் பார்க்கும்போது இரத்தக்கறை இருந்தது. நான் சொல்வதுபோல் 1ம் எதிரி காலை காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் எதுவும்

கொடுக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் அம்பலசேரி சுடுகாட்டில் உள்ள முட்புதரிலிருந்து 50 செ.மீ நீளமுள்ள வெட்டருவாள் ஒன்று கைப்பற்றப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டில் வந்து மேற்படி ஆவணங்களில் கையெழுத்து பெற்றார்கள் என்றால் வீட்டிலிருந்தபோது கூப்பிட்டு சென்றார்கள். வீட்டிலிருந்து நேரடியாக சுடுகாட்டிற்கு கூட்டி சென்றார்கள் என்றால் பஸ்ஸடாண்டு வழியாக சுடுகாட்டிற்கு சென்றோம். இறந்தவருக்கு நான் சொந்தக்காரர் என்பதால் எல்லா ஆவணங்களிலும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றுசொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 8 – திரு. முத்துசங்கர்**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)**

நான் போகும்போது பைக் காவல்நிலையத்தில் இருந்தது என்றால் இல்லை, நானும், முருகேசனும்தான் பைக்கில் காவல்நிலையம் சென்றோம். நான் முருகேசனுக்கு என்ன உறவு என்றால் ஒரே ஊர்க்காரர்கள். மாலை 4.30 மணிக்கு தகராறு நடக்கும்போது 1ம் எதிரியுடன் மணிகண்டன் என்பவர் இருந்தார் என்றால் மணிகண்டன் என்றால் யார் என்று தெரியாது. முருகேசன் என்பவர் எப்படி பழக்கம் என்றால் எனது ஊரை சேர்ந்தவர், உறவினர் கிடையாது. சம்பவம் நடந்தது 02.03.2021 என்றால் சரிதான். அதுவரை 11.04.2021 வரை மேற்படி பைக்கை முருகேசன்தான் அவர் வீட்டில் வைத்திருந்தார் என்றால் சரிதான். சம்பவத்திற்கு இந்த பைக் உபயோகப்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அந்த பைக்தான் உபயோகிக்கப்பட்டுள்ளது. நேரடியாக தெரியாது என்றால் நேரடியாக பார்க்கவில்லை. சம்பவத்திற்கும், TN92 C 4362 என்ற பைக்கிற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதால் முருகேசன் அந்த வாகனத்தை ஒப்படைத்தார் என்றால் நானும், முருகேசனும் சென்றுதான் அந்த வாகனத்தை ஒப்படைத்தோம். சம்பவத்திற்கு முன்பே அந்த வாகனம் முருகேசனிடம் 02.03.2021 அன்று மாலை 4.45 மணிக்கு அவரது வீட்டிற்கு மணிகண்டன் என்பவரால் கொண்டு விடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு 11.04.2021 வரை முருகேசனின்

பொறுப்பிலும், அவருடைய உபயோகத்திலும் இருந்தது என்றால் அதை பற்றி தெரியாது.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

**S.C.No. 207/2021 நாள் 21.04.2026 PW 9 – திரு. இசக்கிதுரை**

(Crl.M.P.No. 17/2026 மனு அனுமதிக்கப்பட்டதன்பேரில், சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையானார். அவர் மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)

**குறுக்கு விசாரணை (எதிரிகள்தரப்பில்)**

நான் இறந்தவருக்கு சொந்தக்காரரா என்றால் இல்லை, தெரிந்தவர். 2ம் எதிரியை தெரியும் என்றால் சரிதான், ஒரே ஊரை சேர்ந்தவர்தான். நான் போகும்போது 2ம் எதிரியை 10 போலீசார் கைது செய்து கையில் வைத்திருந்தார்கள் என்றால் சரிதான். 2ம் எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் நானும் வெற்றிசிங்கும் பைக்கில் பன்னம்பாறை விலக்கின் அருகே வந்துகொண்டிருந்தபோது அங்கு போலீசார் 2ம் எதிரியை விசாரித்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் போவதற்கு முன்பு எழுதி வைத்திருந்தார்கள் என்றால் நான் சென்றபிறகுதான் தட்டச்சு செய்தார்கள். ஆய்வாளர் சொல்ல சொல்ல தட்டச்சு செய்தார்கள் என்றால் 2ம் எதிரி சொல்ல சொல்ல ஆய்வாளர் சொல்லி தட்டச்சு செய்தார்கள். 2ம் எதிரி வீட்டின் கதவு எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தெரு என்றால் மேல அம்பலசேரி. வீடு எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் தெரியாது. அந்த அரிவாள் மண்ணுக்குள்ளிலிருந்து தோண்டி எடுத்தார்கள் என்றால் சரிதான். அது வெட்டருவாள் என்றால் சரிதான். அதில் இரத்தக்கறை இல்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், அவர் வீட்டிற்கு அழைத்து சென்று வெட்டருவாள் எடுத்துக்கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. அத்தாட்சியும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. பன்னம்பாறை விலக்கில்

வைத்து ஒரு கையெழுத்தும், அரிவாள் எடுத்த இடத்திலிருந்து கையெழுத்தும் போட்டோம். அனைத்து ஆவணங்களும் தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் பிரிண்ட் அவுட்டில் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் வைத்து மொத்தமாக கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரி எங்களை அழைத்துசென்று அரிவாள் எடுத்துக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.